**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>**
**<u>ஸ்ரீவில்லிபுத்தூர்</u>**

**OS.No: 195/2023** **நாள் 09.02.2026.**

**வாசா.1, திரு.பரமசிவம் நாடார்**

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 1, 3, 4 எதிர்வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

எனக்கு எழுத படிக்க தெரியாது. நான் இந்நீதிமன்றத்தில் என்ன வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று கேட்டால் எங்கள் சொத்தானதை எதிர்வாதிகள் அவர்களது சொத்து என்று சொல்லி வருவதால் நாங்கள் எங்களுக்குரிய சொத்து என்று சொல்லி வழக்கு தாக்கல் செய்தோம். இந்த வழக்கை தாக்கல் செய்துகொள்வதற்கு யார் தகவல் சொன்னது என்று கேட்டால் நானும், என்னுடைய இரண்டு மகன்களும் தான் தகவல் சொன்னோம். இந்த வழக்குரை சொத்தானது எந்த கிராமத்தில் உள்ளது என்று கேட்டால் சொக்கநாதன்புத்தூர் கிராமத்தில் உள்ளது. அது தவிர வேறு எந்த கிராமத்திலும் இல்லை. நாங்கள் வழக்குரையில் எத்தனை அயிட்ட சொத்துக்களாக காட்டியுள்ளோம் என்று கேட்டால் மொத்தம் 3 அயிட்ட சொத்துக்களாக காட்டியுள்ளோம். அதில் சர்வே எண்கள்.433, 429 ஆகிய இரண்டு சர்வே எண்களை பற்றி தான் எனக்கு தெரியும். இந்த சர்வே எண்களில் எவ்வளவு விஸ்தீரனம் உள்ளது என்றால் எனக்கு படிக்க தெரியவில்லை என்பதால் சொல்லதெரியவில்லை. தாவா சொத்துக்களில் நாங்கள் தான் பாடுபடுகிறோம். நான் சொல்வது போல் தாவா சொத்துக்களில் நாங்கள் பாடுபடவில்லை என்றும் வழக்கில் உள்ள 1, 3, 4 எதிர்வாதிகள் தான் பாடுபடுகிறார்கள் என்று சொன்னால் அது சரியல்ல. என் மாமியார் பார்வதியம்மாளின் அப்பா பெயர் மாடசாமி நாடார். பார்வதியம்மாளின் கணவர் பெயர் ருத்ர மாடசாமி. மேற்படி பார்வதியம்மாளின் மகள் தான் மாரியம்மாள். அந்த மாரியம்மாளை தான் நான் திருமணம் செய்துள்ளேன். எனக்கும் மாரியம்மாளுக்கும் இடையில் 2 ஆண்குழந்தைகளும், 2 பெண் குழந்தைகளும் பிறந்துள்ளார்கள். வழக்கில் உள்ள 1, 2 , 3 பிரதிவாதிகளான லட்சுமி, ராக்கம்மாள், சிவசக்தி ஆகியோர்கள் யார் என்று கேட்டால் எனக்கு தெரியாது. 1974 ம் ஆண்டு நானும், பார்வதியம்மாளும் சேர்ந்து 75 சென்டை கிரையம் வாங்கினோம்.எங்களுக்கு மொத்தம் 3 ஏக்கர் 23 சென்ட் பாத்தியம் .அந்த 3 ஏக்கர் 23 சென்ட் பாத்தியம் என்பதை காண்பிக்கக்கூடிய மூல ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் தாக்கல் செய்யவில்லை. மேற்படி 3 ஏக்கர் 23 சென்ட்டுக்கு எந்தவிதமான பட்டாவையும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது சரிதான். எனக்கு படிப்பறிவு இல்லை. 1 முதல் 3 எதிர்வாதிகளின் தாயார் பெயர் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலும் சாட்சிய பிரமாண பத்திரிக்கையிலும் 1 ஏக்கர் 2 4 சென்ட் நிலத்தையும் என் மாமியார் அனுபவித்து வந்ததாக சொல்லும்போது அதற்கான ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை. நான் 1 ஏக்கர் 24 சென்டை அனுபவித்து வருவதாக நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலும் சாட்சிய பிரமாண பத்திரிக்கையிலும் சொல்லியுள்ளேன் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. பிராது சொத்தில் நான் தான் கிணறு வெட்டினேன் என்று சொல்லும் போது அதற்கான ஆவணங்களையும் நான் தாக்கல்

செய்யவில்லை. 1 முதல் 3 எதிர்வாதிகளின் தாயார் பார்வதியம்மாள் 45 ஆண்டுக்கு முன்பே பெரம்பலூருக்கு சென்றுவிட்டார்என்று நான் வழக்கிற்காக வேண்டி தவறாக சொல்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. பார்வதியம்மாளின் கணவர் சிலையை திருடிவிட்டதால் தான் அவர்கள் பெரம்பலூருக்கு சென்றுவிட்டதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. மேற்படி பார்வதியம்மாளின்கணவர சிலையை திருடியதாக சொல்லி அதற்கான முதல் தகவல் அறிக்கையின் நகலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 1 முதல 3 எதிர்வாதிகள் பெரம்பலூருக்கு குடிபெயரவில்லை என்றும் அவர்கள் உள்ளூரில் தா்ன உள்ளார்கள் என்றும் நான் வழக்கிற்காக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல. பிராது 1 முதல 3 அயிட்ட சொத்துக்களுக்குரிய பட்டா எண்.773 ஆனது 1 முதல் 3 எதிர்வாதிகளின் தாயார் பெயரில் தான் உள்ளது என்று சொன்னால் அது சரிதான். 1 முதல் 3 எதிர்வாதிகளின் தாயார் பார்வதியம்மாள் கடந்த 30.04.2009 ம் ஆண்டு பிராது சொத்துக்களில் 1வது அயிட்ட சொத்தானதை வழக்கில் உள்ள 1ம் எதிர்வாதிக்கு கிரையமாக எழுதிக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அதுபோல் பிராது 2, 3 அயிட்ட சொத்துக்களை பொறுத்து் மேற்படி பார்வதியம்மாள் 2, 3 எதிர்வாதிகளுக்கு 30.04.2009 ம் தேதியிட்ட தான செட்டில்மெண்ட் ஆவணம் மூலமாக எழுதிக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி பார்வதியம்மாள் வழக்கில் உள்ள 1, முதல் 3 எதிர்வாதிகளுக்கு பிராது 1 முதல் 3 அயிட்ட சொத்துக்களை பொறுத்து 30.04.2009 ம் தேதியிட்ட கிரைய ஆவணம் மற்றும் தான செட்டில்மெண்ட் ஆவணமாக எழுதிக்கொடுத்துள்ள ஆவணங்களை தான் நான் இந்த வழக்கில் வாசாஆ.12, வாசாஆ.13, வாசாஆ.14 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு வாசாஆ.12 முதல வாசாஆ.14 ஆவணங்களின் பேரில் பிராது 1 முதல் 3 அயிட்ட சொத்துக்களை வழக்கில் உள்ள 1 முதல் 3 எதிர்வாதிகள் அடைந்து அனுபவித்து வருகின்றார்கள் என்று சொன்னால் அது சரியல்ல. நாங்கள் தான் அனுபவித்து வருகின்றோம். பிராது 1 முதல் 3 அயிட்ட சொத்துக்களை வழக்கில் உள்ள 1 முதல் 3 பிரதிவாதிகளின் அனுபவித்தில் உள்ளதை விசாரணை செய்து தான் 5ம் எதிர்வாதியானவர் தனித்தனியாக பட்டாக்களை வழங்கியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 1முதல் 3 எதிர்வாதிகளின் பெயரிலான பட்டாக்களை தான் நான் இவ்வழக்கில் வாசாஆ 15 முதல் வாசாஆ.17 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த பட்டா எண்கள்.1547, 1548, 1566 என்றால் சரிதான் . நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் பட்டா எண்.772 ல் இருந்து மாற்றம் செய்துள்ளார்கள் என்று சொல்லியுள்ளேன். பட்டா எண்.772 ல் உள்ள சொத்துக்களானது வழக்கில் உள்ள 1 முதல் 3 எதிர்வாதிகளுக்குரிய சொத்துக்கள் அல்ல என்று சொன்னால் அப்படியில்லை. 1 முதல் 3 எதிர்வாதிகளின் குடும்பத்தை பற்றி எனக்கு எந்த விபரமும் தெரியாது. 1ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் மூலமாக கிடைக்கப்பெற்ற சொத்தானதை அவர் வழக்கில் உள்ள 4 ம் எதிர்வாதிக்கு கிரையமாக 13.04.2023 ம்

தேதியில் கிரையமாக எழுதிக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த ஆவண தான் நான் வாசாஆ.18 ஆக குறியீடு செய்துள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 4ம் எதிர்வாதி கிரையம் பெற்ற சொத்தை பொறுத்து முறையாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு அவர் பெயரில் தான் 5ம் எதிர்வாதியானவரால் பட்டா வழங்கபபட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. பிராது 1 முதல் 3 அயிட்ட சொத்துக்கள் பார்வதியம்மாளுக்கு பாத்தியப்பட்டு இருந்து அவர் அதை அனுபவித்து வந்து வழக்கில் உள்ள 1 முதல் 3 எதிர்வாதிகளுக்கு தான செட்டில்மெண்டாக எழுதிக்கொடுத்து அதன் பேரில் பட்டா பெற்ற 1 முதல் 3 எதிர்வாதிகள் அனுபவித்தில் உள்ளது என்று சொன்னால் அது சரியல்ல 1986ம் தேதியில் எங்களுக்கு ஒரு உயில் உள்ளது-. பிராது 1ம் அயிட்ட சொத்தானதை 4ம் எதிர்வாதியானவர் கிரையம் பெற்று அவர் இன்று வரையிலும் தனது ஆளுகையிலும் அனுபவித்திலும் வைத்து அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் அது சரியல்ல. நாங்கள் எந்த காலத்திலும் பிராது சொத்துக்களை அனுபவித்தது இல்லை என்றும் வழக்கிற்காக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல. தாவா சொத்துக்கள் எங்களுக்கு பாத்தியப்பட்டு இருந்திருந்தால் அதற்கான மூல ஆவணங்களையும் பட்டாவையும் நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றும் சொத்தானது எங்களுக்கு பாத்தியமும் அனுபவமும் இல்லை என்பதால் தான் மேற்படி ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது சரியல்ல.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டி வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 09th day of February 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.